# ஜீவ ஒளி

“என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல்
ஜீவஒளியை அடைந்திருப்பான்”
(யோவான் 8:12)

திவ்விய சுபாவத்துக்குப்
பங்குள்ளவர்களாகும் பொருட்டு,
மகா மேன்மையும் அருமையுமான
வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே
நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.
2 பேதுரு 1: 4

2022 ஜனவரி - ஜூன்

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக் கூடிய **“ஜீவ ஒளி”** சஞ்சிகையை வெளியிடுவதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் தங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்-கொள்ளாதவர்கள் அவரை தங்கள் ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்வதுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது.

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கூடாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ எம்மை தொடர்பு கொள்ளுங்கள்

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
(+94) 773595533
cfellowship@sltnet.lk
www.christianfellowshipcentre.com

# பொருளடக்கம்


4 பரலோகத்தின் நாட்கள்

6 வாக்குத்தத்தங்கள் 2022

12 மன்னித்தல்

14 என்னை இரட்சித்த கிறிஸ்து இயேசு

15 சாராளின் நகைப்பு

17 அன்பு

19 நீதியுள்ள நியாயாதிபதி

# பரலோகத்தின் நாட்கள்

"உங்கள் நாட்களும், உங்கள் பிள்ளைகளின் நாட்களும், பூமியின்மேல் வானம் இருக்கும் நாட்களைப்போல அநேகமாயிருக்கும்" (உபாகமம் 11:18)

நாம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து மற்ற அனைத்து அந்நிய தெய்வங்க-ளையும் விட்டு விலகியிருந்தால், அவர் நமக்கு தேவையானவற்றை வருடத்தின் துவக்கம் முதல் முடிவு மட்டும் தருவார் (உபா 11:12).

வியாதியிலும் ஏழ்மையிலும் உங்களுக்கு தேவையான யாவையும் அவர் தருவார். சீக்கிரமாயன்றினும் தாமதமாக அல்ல; அளவுக்கதிகமாய் அன்றினும் குறைவாக அல்ல. கர்த்தர் இஸ்ரவேலருக்கு மட்டுமல்ல அவர்களின் மந்தைக்கும் போதுமானதைக் கொடுப்பதாக வாக்களித்தார். (உபா 11:15). நாம் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை என்பதே இதன் அர்த்தம், ஏனென்றால் கர்த்தர் நமது வெளிப்படையான தேவைகளை மட்டும் அல்ல, நமது சிறிய அறியப்-படாத தேவைகளையும் வழங்குவார்.

அவர்கள் வஞ்சிக்கப்பட்டு விடக்-கூடாது என்றும் கர்த்தர் எச்சரித்தார். மக்கள் செழித்து, வருமானம் பெருகி, இறைவனை விட்டு விலகிச் சென்ற பல சம்பவங்களை நான் பார்த்திருக்கிறேன். ஒரு காலத்தில் பக்திவைராக்கியம் நிரம்பியிருந்த அவர்கள் இப்போது குளிர்வடைந்து உள்ளனர். தேவைப்படும் போது அவர்கள் கூட்டங்களுக்கு தவறாமல் வருவார்கள், மீண்டும் மீண்டும் அவர்கள் ஜெபிக்கும்படி கேட்பார்கள், ஞாயிற்றுக்கிழமைகளில் கூட நாம் அவர்களை அதிகம் பார்ப்பதில்லை! அவர்கள் செழுமையால் ஏமாற்றப்-பட்டுள்ளனர் என்பது தெளிவாகிறது. எனவே, உங்களில் செழிப்பாக இருப்பவர்களை நான் எச்சரிக்-கிறேன், உங்கள் ஜெப நேரத்தை ஒருபோதும் குறைக்காதீர்கள், கர்த்தரின் வீட்டை விட்டு விலகி ஒருக்காலும் ஒருபோதும் இருக்காதீர்கள்.

சிலர் தமது தசமபாகத்தை தேவனுக்கு தவறாமல் கொடுப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். ஆனால், இப்போது வருமானம் அதிகரித்துள்-ளதால், "இவ்வளவு தசமபாகம் கொடுப்பது எப்படி? எவ்வளவு பெரிய தொகை!" என யோசிப்பதுண்டு. நாம் தேவனின் பங்கை அவருக்குக் கொடுக்க தவறினால், நாம் உண்மையில் கடவுளைக் கொள்ளையடிக்கிறோம்! (மல்கியா 3:8-10). தேவனுக்குரிய நேரத்தையும் கொள்ளையடிக்காதீர்கள். ஒருவேளை நீங்கள் திருமணம் செய்து கொள்வதற்கு முன், நீங்கள் ஜெபத்தில் பல மணிநேரம் செலவழித்திருக்கலாம், ஆனால் இப்போது திருமணம் செய்து கொண்ட பின்பு, அவருக்கு நேரமில்லை! இந்த வகையான கொள்ளை உங்களை ஆன்மீக வறட்சி நிலைக்கு கொண்டு வரும். நீங்கள் கடவுளின் எச்சரிக்கையை ஏற்றுக்கொண்டு, உலகின் கவர்ச்சிகளால் நீங்கள் ஏமாற்றப்படாமல் இருப்பதைக் கண்டால், அவர் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பார்.

உபாகமம் 11:18ல் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரைகளிலிருந்து பல பெறுமதி வாய்ந்த பாடங்களை நாம் கற்றுக்

கொள்ளலாம். அவரது வார்த்தைகளை தங்கள் இருதயத்திலும் தங்கள் ஆத்துமாக்களிலும் வைக்கும்படி அவர்களுக்கு சொல்லப்பட்டது. நாமும் தேவனின் வார்த்தை நம் இதயங்களில் நிறைந்திருக்க அனுமதிக்க வேண்டும் (கொலோ. 3:16). அவர்கள் கைகளில் ஒரு அடையாளத்திற்காக அவற்றைக் கட்ட வேண்டும், நாங்கள் எங்கு சென்றாலும் எங்களுடைய பரிசுத்த வேதாகமங்களை எம்முடன் எடுத்து செல்ல வேண்டும். அவர்கள் தங்கள் கண்களுக்கு முன்பாக தேவனுடைய வார்த்தைகளை எப்பொழுதும் எழுதி வைத்திருக்க வேண்டும். நாமும் தேவனின் வாக்குத்தத்தங்களை எப்பொழுதும் நமக்கு முன் வைத்து, நம் எல்லா தேவைகளுக்காகவும் அவற்றை தினமும் கோர வேண்டும். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கடவுளுடைய வார்த்தையை விடா முயற்சியுடன் கற்பிக்க வேண்டும். "நீ அவைகளை உன் பிள்ளை-களுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்-திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசு" (உபா. 6:7). நாமும் அவ்வாறே செய்ய வேண்டும்.

இந்தக் காரியங்கள் அனைத்திலும் நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால், கர்த்தர் நம்முடைய நாட்களைப் பெருக்கி, பூமியில் பரலோகத்தின் நாட்களைக் கொடுப்பதாக வாக்கு அளிக்கிறார் (உபா. 11:21). இந்த வாக்குறுதிகள் அனைத்தும் ஞாயிற்றுக்-கிழமைகளில் மட்டுமல்ல, வாரத்தின் ஒவ்வொரு நாளும், வருடம் முழுவதும் நம் அனுபவமாக இருக்கும். தேவனின் ஆசீர்வாதம் வானத்திலிருந்து நம்மீது பாயும்.

- Bro. Bakth Singh -

## வெளிப்படுத்தல் புத்தகத்திலுள்ள 7 பாக்கியவான்கள்

இந்தத் தீர்க்கதரிசன வசனங்களைவாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்
வெளி 1:3

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்.
வெளி 14:13

விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களை காத்து கொள்ளுகிறவன் பாக்கியவான்.
வெளி 16:15

ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்.
வெளி 19:9

முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவான்.
வெளி 20:6

இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான்.
வெளி 22:7

அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.
வெளி 22:14

# வாக்குத்தத்தங்கள் 2022

நாம் ஒவ்வோர் புத்தாண்டுக்கும் சில வாக்குத்தத்தங்களை தேர்ந்தெடுப்பதை வழக்கத்தில் கொண்டுள்ளோம். இவ்வருடத்திற்கும் மூன்று வாக்குத்தத்தங்கள் எமக்குள்ளன. வேதத்திலிருந்து வாக்குத்தத்தங்களை தெரிந்தெடுப்பது நல்லது. வேதத்தில் எப்பகுதியாயினும் உங்கள் இருதயத்தை ஈர்த்தால், நீங்கள் அதை தேவன் உங்களுடன் விசேஷித்த விதத்தில் பேசுவதாக ஏற்றுக்கொள்ளலாம். அதை விசுவாசித்து பற்றிக்கொண்டு அதன்படி வாழுங்கள்.




### வாக்குத்தத்தம் 1

முதலாவது வாக்குத்தத்தமானது மத்தேயு 17:5ல் இருந்து எடுக்கப்பட்டு உள்ளது. “இவர் என்னுடைய நேச குமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்.” எனும் அவ்வசனத்தின் ஒரு பகுதி மாத்திரம் எடுக்கப்பட்டுள்ளது

நாம் இதை வாக்குத்தத்தம் என்று கூறினாலும் இது ஒரு புத்திமதியாகும். இச்சம்பவம் எமக்குத்தெரியும். எமது ஆண்டவர் மலையில் மறுரூபமாகையில் பிதாவின் குரல் கேட்டது. “பிதாவின் குரல்” மூன்று விதமான அர்த்தமும் பிரயோகமும் கொண்டுள்ளது.

வசன பின்னணியின்படியும் வரலாற்று நிகழ்வின்படியும், “இவர் என்னுடைய

நேச குமாரன்” என்பதால் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அடையாளத்தை உறுதிப்படுத்தி “இவருக்கு செவி கொடுங்கள்” என்பதின் மூலம் அவருக்கு செவிகொடுக்க வேண்டும் என சீடர்களுக்கு கொடுக்கப்பட்ட புத்திமதியாகும்.

இரண்டாவதாக இது அனைத்து விசுவாசிகளாலும் சீடர்களாலும் இன்றைய சபையாலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது. சுவிசேஷ புத்தகங்களிலுள்ள ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் படிப்பினைகளை நாம் அனைவரும் அறிவோம். நாம் எமது ஆண்டவரின் அடிப்படை உபதேசங்களுக்கு திரும்பி அவற்றை பின்பற்ற வேண்டும். அவர் உபதேசித்த சத்தியங்களான “பகைவனை நேசித்தல்”, “சிலுவையை எடுத்துக்கொண்டு அவர் பின் செல்தல்”, “நீங்களே உலகத்திற்கு ஒளியாயிருக்கிறீர்கள்”, “நீங்களே உலகத்திற்கு உப்பாயிருக்கிறீர்கள்” போன்ற சில அடிப்படை உபதேசங்கள் எமக்குள்ளன. நாம் அவருக்கு செவிகொடுக்க வேண்டும். நாம் அடிப்படைக்குத்திரும்பி அவருக்கு செவிகொடுத்து அவரது உபதேசங்களை பற்றிக்கொண்டு அவரை பின்பற்ற வேண்டும்.

தேவன் எம்முடன் பேசுவதற்கு மேலும் ஒன்றுமில்லை. அவருடைய குமாரன் மூலமாக அவர் பேசியுள்ளார் என எபிரெயர் 1:1-2 எமக்கு கூறுகின்றது. “பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்”. ஆகவே, பிதா அவருடைய குமாரன் மூலமாக எம்முடன் பேசினார். எனவே நாம் அந்த அடிப்படை உபதேசங்களை பின்பற்ற வேண்டும்.

மூன்றாவதாக, இதை ஆவிக்குரிய விதத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதாவது நாம் ஒவ்வொருவரும் எமது அன்றாட வேதவாசிப்பின் மூலம் தேவ குமாரனின் குரலை கேட்க வாஞ்சிக்க வேண்டும்.

சாலொமோனின் உன்னதப்பாட்டு 2:8, “இது என் நேசருடைய சத்தம்”. நாம் அவருடைய சத்தத்தைக்கேட்டு “என் நேசருடைய சத்தத்தைக்கேட்டேன்” என துள்ளிச்சொல்ல வேண்டும். ஆவிக்குரிய பிரச்சினை, எம் இருதய கடினம், எம் மந்தநிலை மற்றும் எம் பிடிவாதம் போன்ற எமது அனைத்து பிரச்சினைகளுக்கும் ஒரேயொரு விடை மாத்திரமே உண்டு. நாம் தேவ குமாரனின் குரலை கேட்க வேண்டும்.

சங்கீதம் 29:3-9ஐ வாசிக்குமாறு நான் உங்களுக்கு பரிந்துரைக்கின்றேன். “கர்த்தருடைய சத்தம்” ஏழு தடவை குறிப்பிடப்பட்டுள்ளது.

வேதத்தை வாசித்து, தேவன் உங்கள் இருதயத்தில் பேசுவதை கேட்க நாடுதல் என்ற இந்த ஒரு காரியத்தை ஒவ்வொரு நாளும் நாம் செய்ய முடிந்தால் நன்று. அதைச்செய்ய உங்களுக்கு சித்தமா?

## வாக்குத்தத்தம் 2

கடந்த இரண்டு வருடங்களையும் எம் வாழ்வில் சுற்றியுள்ள சம்பவங்களையும் நாம் திரும்பிப்பார்த்தால், ஒரு விடயம் மிக தெளிவாகவும் பலமாகவும் எமக்கு

நிரூபிக்கப்பட்டுள்ளது. வேத மொழியில் நான் சொன்னால் அது சங்கீதம் 60:11,12ல் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது, “மனுஷனுடைய உதவி விருதா. தேவனாலே பராக்கிரமம் செய்வோம்”. 2022 வருடத்திற்கான 3 வாக்குத்தத்தங்களையும் அதன் பின்னணியையும் கவனமாகவும் ஆழமாகவும் தியானித்தால் அவை, “முழுமையாக தேவன் மீது மாத்திரம் சார்ந்திருத்தல்” என்ற பொது கருத்தை கொண்டுவந்துள்ளன.

எதிர்வரும் நாட்களுக்கு நாம் முகங்கொடுக்கையில் இதை நாம் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என தேவன் விரும்புகிறார் என நான் உணர்கிறேன். தனிநபர்களாகவோ குடும்பங்களாகவோ அல்லது விசுவாசிகளின் கூட்டமாகவோ எமது வாழ்வில் எதிர்பாராத அனுபவங்களுக்கூடாக சென்று, நிச்சயமற்ற எதிர்காலத்தை நாம் எதிர்நோக்கியுள்ளோம். இந்நேரத்தில் தான் 2022ற்கான தேவனுடைய இந்த வாக்குத்தத்தம் எமக்குள்ளது. சங்கீதம் 60:12, “தேவனாலே பராக்கிரமம் செய்வோம்”.

இவ்வாக்குத்தத்தத்தின் மூலம் தெரியப்படுத்தப்படுகின்ற ஆவிக்குரிய அறிவுறுத்தல்களை நாம் அறிந்து கொள்ள தேவனாலே பராக்கிரமம் செய்வதற்கான 3 இரகசியங்களை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

1) **தேவனுக்கான அர்ப்பணிப்பை மறுசீரமைத்தல் - சங்கீதம் 60:1**

பராக்கிரமம் செய்வதற்கான முதல் இரகசியம் மறுசீரமைத்தல் ஆகும். உண்மையான வெற்றிப்பாதை இங்கு தான் ஆரம்பிக்கிறது. நாம் ஜெயங்கொள்ள வேண்டுமாயின் நாம் இப்பொழுது சென்று கொண்டிருக்கும் வழியில் தொடர்ந்து செல்ல முடியாது.

நாம் சங்கீதம் 60ஐ வாசிக்கையில் அதன் பின்னணியிலிருந்து மறுசீரமைத்தலுக்கான தேவையையும் அர்த்தத்தையும் நாம் அறிந்து கொள்ளலாம். எமக்கும் எம்மைச்சுற்றியும் நடப்பவற்றின் மூலம் தேவனுடைய சிட்சையை புரிந்துகொள்ளவேண்டும் - வசனம் 3.

தேவனுடைய கோரிக்கைகளுக்கு எம்மை விட்டுக்கொடுக்க வேண்டும். தற்போது எம் வாழ்வில் எல்லாம் சரியாக இருப்பதால் நாம் தேவனுக்கு முன் சரியாயிருக்கிறோம் என எளிதாக நினைக்கக்கூடாது. ரோமர் 2:4 “தேவ தயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறது”. எங்களது அனைத்து தோல்விகள் மற்றும் உண்மையற்ற நிலையிலும் எம் வாழ்வில் தேவனுடைய உண்மைத்துவம் இருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் - வச. 4.

மறுசீரமைத்தலின் அனுபவத்தினுள் நாம் வருமட்டும் எம்மால் தேவனுடைய வெற்றியை அனுபவிக்க முடியாது.

அன்புள்ள சகோதர சகோதரிகளே, நாம் தேவனிடத்திற்கு திரும்பி வருவதற்காக இன்றிரவு மீண்டுமொரு சந்தர்ப்பத்தை அளிக்கிறார். இன்றிரவு நாம் எமது இருதயங்களை கடினப்படுத்தாமல், அவரிடத்திற்கு திரும்புவதற்காக தேவன் நமக்கு விடுக்கும் அழைப்பை எம்மை சூழ்ந்துள்ள சூழ்நிலைகளினூடாக நாம் அறிந்து, அவரிடத்தில் திரும்பி எம் வாழ்வில் தேவனுடைய கிரியைகளை அனுபவிப்போம். மறுசீரமைத்தல் தேவனால் பராக்கிரமம் செய்வதற்கான முதல் இரகசியம்!

**2. மனிதன் மற்றும் மாம்சத்தின் மீதுள்ள நம்பிக்கையை துறத்தல் சங்கீதம் 60:11**

உண்மையான வெற்றியை நாம் அனுபவிக்கவும் பராக்கிரமம் செய்வதற்குமான இரண்டாவது இரகசியம் மனிதன் மற்றும் மாம்சத்தின் மீதுள்ள நம்பிக்கையை துறத்தல் ஆகும். நாம் மாமசத்தில் தங்கிவாழுமளவும் எமக்குள்ளும் எம்மூலமாயும் தேவனால் செயல்பட முடியாது, செயல்படவும் மாட்டார். "அவனோடிருக்கிறது மாம்ச புயம், நமக்குத் துணைநின்று நமது யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம் தேவனாகிய கர்த்தர் தானே" 2 நாளாகமம் 32:8. இது அசீரிய படையால் சூழ்ந்திருந்த போது எசேக்கியாவின் அனுபவமாகும். இந்த மோட்சப்பயணத்தில் எமக்கு ஒவ்வொருத்தரினதும் ஐக்கியமும் நட்பும் தேவை. ஆனால், அதை எம் பலமாகவும் பாதுகாப்பாகவும் கொண்டால் எம் வாழ்வில் கிரியை செய்யும் தேவனுடைய வல்லமையை அனுபவிக்க முடியாது.

"மனுஷனை நம்புவதை பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்" சங்கீதம் 118:8. நேர்மைக்காகவும் தேவனுக்காகவும் தனியாக நிற்க நேரிட்டால், நீங்கள் அதை செய்ய சித்தமா? ரோமர் 8:31 "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?"

பலம் மற்றும் பதவி கொண்ட ஒருவர் அல்லது ஒரு குழு சார்ந்து நிற்பதால் எல்லாம் சரி என்று நினைக்காமல், தேவனுக்காக தேவனோடு நில்லுங்கள். நீங்கள் தேவன் பக்கத்திலும் தேவன் உங்கள் பக்கத்திலும் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். சங்கீதக்காரனான தாவீது தன் முன் அனுபவத்தின் மூலம் மனிதனில் தங்கியிருப்பதும் நம்புவதும் பயனற்றது என்பதை அறிவான்.

எம் வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் தேவன் தலையிட்டு உதவாவிடில் எமக்கு வேறு தீர்வில்லை என்பதை நாம் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். மனிதனில் தங்கியிருப்பதை துறந்து தேவனில் முழுமையாக தங்கியிருக்க தீர்மானித்து 2022ஐ வழிநடத்த தேவனை விசுவாசிக்க நீங்கள் ஆயத்தமா, விருப்பமா? அப்பொழுது தான் "தேவனாலே பராக்கிரமம் செய்வோம்" என்று சொல்லக்கூடிய அற்புத அனுபத்திற்குள் உங்களால் வர முடியும்.

**3. தேவனுடைய வாக்குத்தத்தம், திட்டம் மற்றும் நோக்கத்தில் தங்கியிருத்தல் சங்கீதம் 60:4, 6-10**

தேவனாலே பராக்கிரமம் செய்வதற்கான 3வது இரகசியம், தேவனுடைய வாக்குத்தத்தம், திட்டம் மற்றும் நோக்கத்தில் உறுதியாக தங்கியிருத்தல் ஆகும். உண்மையான வெற்றியை அனுபவிக்க வேண்டுமாயின் தேவனின் வாக்குத்தத்தம், திட்டம் மற்றும் நோக்கத்தில் எம்மை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தேவனுடைய வாக்குத்தத்தங்களை உண்மையாக கருதவேண்டுமே தவிர கதையாக அல்ல. எமக்கும் எம்மைச்சுற்றியும் எது நடந்தாலும் தேவன் அவருடைய வாக்குத்தத்தம், திட்டம் மற்றும் நோக்கத்தை எம் வாழ்வில் நிறைவேற்றுவார் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும். அவற்றில் வைக்கும்

விசுவாசம் எமது சூழ்நிலைகளுக்கு மேலாக வாழ எமக்கு உதவும்.

வரும் நாட்கள் எமக்கு என்ன வைத்திருக்கின்றன என நாம் அறியோம். வாழ்வில் எதிர்பாராத நிலையற்ற அனுபவங்களுக்கூடாக நாம் செல்ல நேரிடலாம். தேவனின் வாக்குத்தத்தம், திட்டம் மற்றும் நோக்கத்தில் எம்மை உறுதிப்படுத்தி கொண்டால் நாம் வெற்றியை நிலைப்படுத்தலாம்.

எபிரெயர் 10:23 "அல்லாமலும், நம் நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே."

"நான் நினைத்திருக்கிற படியே நடக்கும் நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும் என்று சேனைகளின் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்னார். சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்? அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது, யார் அதைத் திருப்புவான்?" ஏசாயா 14:24,27

தேவனுடைய வாக்குத்தத்தம், திட்டம் மற்றும் நோக்கத்தை எம் வாழ்வில் அறிந்து விசுவாசித்தால் எம்மை சுற்றியிருப்பவர்களாலும் அவர்களது வெற்றி மற்றும் ஊழியத்தாலும் நாம் பயப்படத்தேவையில்லை. அன்புள்ள சகோதர சகோதரிகளே, இன்று எம்மை புதிதாக கர்த்தருக்குள் அர்ப்பணிப்போம். எம் வாழ்வில் தேவனுடைய செயல்பாடுகளில் தங்கியிருப்பதை நாம் காண்பித்து இந்த ஆசீர்வாதத்தின் அனுபவத்திற்குள் வந்து தைரியமாக "தேவனாலே பராக்கிரமம் செய்வோம்" என கூறுவோம்.

## வாக்குத்தத்தம் 3

2 நாளாகமம் 15:7ல் இருந்து 3வது வாக்குத்தத்தம் எடுக்கப்பட்டுள்ளது, "உங்கள் கிரியைகளுக்குப் பலன் உண்டு". இவ்வசனத்தில் "ஆகவே" என்ற வார்த்தை தவறவிடப்பட்டுள்ளது. ஆனால் அது மிக முக்கியமானது. நாம் அதைரியமான சூழ்நிலைகளுக்கூடாக செல்லும்போது, "நாம் ஏன் தொடர்ந்து கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும்?" என்று நினைக்க வேண்டும். அப்பொழுது "எம் கிரியைகளுக்கு பலனுண்டு" என்ற பதில் கிடைக்கும்.

எம் தேவன் பலனை நோக்கிப்பார்க்க எம்மை தைரியப்படுத்துகின்றார். மீண்டும் மீண்டும் அவர் பலனை பற்றி பேசுகின்றார். ஆகவே "இதைச்செய்வதால் எனக்கு என்ன பயன்?" என்று தயவுசெய்து எப்பொழுதும் சொல்ல வேண்டாம். ஏனென்றால், நாம் தேவனுக்கு ஊழியம் செய்கிறோம் அவர் பலனளிப்பார்.

2 நாளாகமம் 15:7 ஆனது யூதா ராஜாவான ஆசாவுக்கு கூறப்பட்டது. அவன் சீர்திருத்தத்தை கொண்டு வர விரும்பினான். தன் நாட்டில் இதை செய்வதில் அவன் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தான். ஆனால், ஆசா ராஜா தேவனுடைய வாக்குத்தத்தத்தில் தங்கி தன் முயற்சியை கைவிடாதிருந்தான் என நாம் வாசிக்கின்றோம். மக்கள் அனைவரும் அவனை பின்பற்றி கர்த்தரைத்தேடினார்கள். தேவன் அவர்கள் கிரியைகளுக்கு தக்க பலனளித்தார்.

இதைத்தான் தேவன் எமக்கும் வாக்களித்துள்ளார். உங்களுடைய

கிரியைகளுக்கு பலனளிப்பார் என உங்களுக்கு அவர் வாக்களிக்கின்றார். ஆகவே, 2022ல் இவ்வாக்குத்தத்தத்தை உங்களுடையதாக்கிக்கொள்ள விருப்பமா? அதைப்பற்றிக்கொள்வதா இல்லையா என்பது உங்களுடைய தெரிவே. கர்த்தருடைய காரியங்களில் விசுவாசமாயிருங்கள். உங்கள் கிரியைகளை தேவன் காண்கிறார்.

இவ்வாக்குத்தத்தங்களை நீங்கள் அவதானித்தால், முதலாவது வாக்குத்தத்தம் ஒரு ஆணையாகும். இரண்டாவது வாக்குத்தத்தம் அந்த ஆணைக்கான மறுமொழியாகும். நீங்கள் உண்மையாய் கீழ்ப்படியும் போது நீங்கள் பெற்று கொள்ளும் பதில் தான் மூன்றாவது வாக்குத்தத்தமாகும்.

நீங்கள் தேவனுடைய நேச குமாரனான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு செவிகொடுத்து அவரது வல்லமையினால் பராக்கிரமம் செய்யும் போது உங்களுக்கு பலன் கிடைக்கும்.

இவ்வாக்குத்தத்தங்களை தயவு செய்து வாசித்து அவற்றை உங்கள் வாழ்வில் பிரயோகியுங்கள். நீங்கள் இவ்வருடத்தின் இறுதியில் அதன் பலனைக்காண்பீர்கள்.

## வேதாகம புத்தகங்கள் பற்றிய புதுமையான புள்ளிவிபரங்கள்

### 1 நாளாகமம்

அதிகாரங்கள் : 29
வசனங்கள் : 941

### அதிகார பகுப்பு

- **வம்சவரலாறு**
  1 - 9 அதிகாரங்கள்
- **சவுலின் வீழ்ச்சி**
  10ம் அதிகாரம்
- **தாவீது அரசனாதல்**
  11 - 12 அதிகாரங்கள்
- **தாவீதின் ஆட்சி**
  13 - 20 அதிகாரங்கள்
- **தாவீதின் பெருமை**
  21ம் அதிகாரம்
- **தேவாலயம் கட்ட ஆயத்தம்**
  22 - 27 அதிகாரங்கள்
- **தாவீதின் உரை**
  28 - 29 அதிகாரங்கள்



# மன்னித்தல்

சென்ற இதழின் தொடர்ச்சி...

மத்தேயு 18ம் அதிகாரத்தில் மன்னித்தலைக் குறித்து கர்த்தராகிய இயேசு கூறும் உவமையில், ஒரு ராஜா தன்னிடத்தில் 10,000 தாலந்துகள் கடன்பட்ட ஒருவனை மன்னித்துவிட்டதாக நாம் காண்கிறோம். அவனுடைய கடன் முற்றிலும் ரத்து செய்யப்பட்டது. ஒரு தாலந்து பொன் சுமார் 100 பவுண் எடை இருக்கும். அது குறைந்தபட்சம் 10 லட்சம் டாலர்கள் மதிப்புள்ளதாய் இருக்கும். அப்படியென்றால் பத்தாயிரம் தாலந்துகள் என்றால், அதை போன்று பத்தாயிரம் மடங்கு (பத்தாயிரம் மில்லியன் டாலர்கள்) தொகையை ஈவாக கொடுத்துவிட்டான் என நாம் கூறலாம்.

உண்மையாகவே சிலுவையில் கர்த்தராகிய இயேசு நமக்காக செலுத்திய கிரயமானது அதைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமாயிருக்கிறது! அது கணிக்க முடியாதது! ஆனால் 10000 மில்லியன் டாலர்கள் பெற்ற ஊழியக்காரன் தன்னிடத்தில் 100 வெள்ளிப்பணம் (சுமார் ஒரு டாலர்) மாத்திரம் கடன்பட்டிருந்த ஒருவனை கொல்ல முயற்சித்தது எவ்வளவு துக்ககரமான காரியமாயிருக்கிறது!

நாம் நமக்கு தீங்கிழைத்தவர்களை மன்னிக்க கற்றுக்கொள்ளவில்லை எனில், நம்முடைய ஜீவியம் பரவசமூட்டுவதாக இராது. மறுநாள் காலை கண்விழிக்காவிட்டால் நலமாய் இருக்குமே என்ற எண்ணத்துடனே படுக்கைக்கு செல்லுகிறவர்களாய் இருப்போம். நாம் விழிக்கும் போது மற்றொரு நிர்ப்பந்தமான நாளை சந்திக்கும்படி நம்முடைய படுக்கையை விட்டு எழும்ப நாம் மனதில்லாதிருப்போம். ஆனால் கிறிஸ்து எவ்விதமாக மன்னித்தாரோ அவ்விதமாகவே நாமும் மன்னிக்க கற்றுக்கொள்வோமென்றால், நம் வாழ்க்கை முற்றிலுமாக வித்தியாசமான ஒரு வரலாறாக மாறிவிடும்!

கிறிஸ்துவைப் போல மன்னித்தல் நம்மில் அநேக நேர்த்தியான குணாதிசயங்களை உருவாக்குகிறது.

### ஒருவரையொருவர் தாங்கி ஒருவருக்கொருவர் மன்னித்தல்

“ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும் தயவையும், மனத்தாழ்மையும், சாந்தத்தையும் நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு ஒருவரையொருவர் தாங்கி... கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்” (கொலோ 3:12-13)

“ஒருவரையொருவர் தாங்கி” என்பது ஒருவர் தற்காலத்தில் நமக்கு விரோதமாக செய்கிற தப்பிதங்களை நாம் மன்னிப்பதை குறிக்கிறது. “ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்” என்பது ஒருவர் கடந்த காலத்தில் நமக்கு விரோதமாக செய்த தப்பிதங்களை நாம் மன்னிப்பதை காண்பிக்கிறது. இந்த அர்த்தத்தில், ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட சத்தியத்தை நாம் அப்போஸ்தலனாகிய பவுலிடத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம். அவர், “ஒன்று செய்கி-

றேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருகிறேன்." என்று கூறுகிறார் (பிலி 3:13-14). நாம் பின்னானவைகளை, கடந்த காலத்தில் நமக்கு விரோதமாக இழைக்கப்பட்ட தவறுகளை மன்னித்து மறக்க முடியாதிருக்கும் பட்சத்தில் "முன்னானவைகளை" அதாவது சந்தோஷம், சமாதானம், தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகள் முதலானவைகளை நாடி முன்னேறவும் அவற்றை அடைந்து கொள்ளவும் முடியாது.

### உருக்கமான இரக்கம்

தம்முடைய முகத்தில் துப்பினவர்கள் மீதும் தம்மை வாரினால் அடித்தவர்கள் மீதும் கர்த்தர் இயேசுவுக்கு மனதுருக்கம் உண்டாயிற்று. அந்த மனதுருக்கம், "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று அவர்களுக்காக அவரை ஜெபிக்க செய்தது. நம்மால் பிறரை மன்னிக்க முடியாவிட்டால், நாம் அவர்கள் பேரில் எரிச்சல் உள்ளவர்களாகவும், மனத்தாங்கலடைகிறவர்களாயும் கோபப்படுகிறவர்களாயும் இருப்போம். நாம் மனத்தாங்கலடைதலும் எரிச்சலடைதலும் நம்மில் மன்னிக்க முடியாத ஆவி உள்ளதென்பதற்கான நிச்சயமான அடையாளங்களே!

### தயவு

தயவு என்ற வார்த்தைக்கான கிரேக்க பதம், நற்குணம் அல்லது பிரயோஜனமுள்ளவர்களாயிருத்தல் என்று பொருள்படும். கர்த்தராகிய இயேசு தமக்கு மிக மோசமான எதிரிகளாக நடந்து கொண்டவர்களுக்கும் கூட பிரயோஜனம் மிக்கவராகவும், ஆசீர்வாதமாகவும் திகழ்ந்தார். தம்மை கைது செய்யும்படியாக வந்த மல்குஸ் என்பவனுக்கு அவர் ஒரு புத்தம் புதிய காதை சிருஷ்டித்துக் கொடுத்தார்.

பழைய ஏற்பாட்டில் யோசேப்பினுடைய சகோதரர் அவனைப் பகைத்தார்கள்; அவனைக் கொல்லும்படி சதித்திட்டம் தீட்டினார்கள்; மற்றும் பல தீமைகளை அவனுக்கு செய்ய முற்பட்டார்கள். ஆனால் அவனோ பின் நாட்களில் அவர்களுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாக இருந்து அவர்களையும் அவர்களுடைய பிள்ளைகளையும் பராமரித்தான்.

"ஜீவாதிபதியை கொலை செய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரில் இருந்து எழுப்பி உங்களை ஆசீர்வதிக்கும்படி உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார்" என அப்போஸ்தலனாகிய பேதுரு கர்த்தராகிய இயேசுவை பற்றி யூதரிடத்தில் கூறுகிறார் (அப் 3:15-26). தம்மை கொலை செய்தவர்களுக்கே கர்த்தராகிய இயேசு ஒரு ஆசீர்வாதமாக மாறினார்.

ஆம்! கிறிஸ்து மன்னித்தது போல மன்னித்தல் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட ஜீவியமாயிருப்பதால் அது மிகவும் பரவசமூட்டுவதாயிருக்கிறது.

- Paul Sebastian -

# என்னை இரட்சித்த கிறிஸ்து இயேசு

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே இந்த ஜீவ ஒளியினுடாக என்னுடைய இரட்சிப்பின் சாட்சியை பகிர கொடுத்த என் தேவனுக்கு நன்றிகள்.

என்னுடைய பெயர் தேவி. நான் இந்து குடும்பத்தை சேர்ந்தவள். இந்து சமய வழிபாடுகளின் படி சமய கலாச்சாரங்களையும் சடங்குகளையும் பின்பற்றி வழிபட்ட ஒருத்தியாக இருந்தேன். என்னுடைய பெற்றோர்கள் இச்சமயத்தின் பின்னணியை பற்றி கூறி இருந்தாலும் இதில் ஒரு சில காரியங்கள் எனக்கு கேள்வியாகவே இருந்தன. ஆனாலும், குடும்பத்தின் இந்து சமய வழிபாட்டுடன் நானும் வாழ்ந்து வந்தேன். பல உலக பிரக-ாரமான காரியங்களிலும் பிசாசின் பிடியிலும் வாழ்ந்து வந்தேன்.

இப்படியாக இருக்கும் போது நான் வாழ்ந்த பிரதேசத்துக்கு ஒரு சில கிறிஸ்தவ ஊழியக்கார சகோதரிகள் இயேசு என்பவரை பற்றி சொல்லவும் கூட்டங்கள் நடத்தவும் வருவார்கள்.

ஒரு நாள் அவர்கள் என்னையும் சந்தித்து இயேசு கிறிஸ்துவை பற்றி கூறினார்கள். ஆனாலும் எனக்கு அதை பற்றி அவ்வளவாக புரியாவிட்டாலும் அவர்களின் அன்புக்காகவும் வலியுறுத்-தலுக்காகவும் அவர்கள் அழைத்த சபை ஆராதனை கூட்டத்திற்கு போக நேரிட்டது. நான் ஏனோ தானோவென்றே அந்த கூட்டத்திற்கு சென்றேன். அங்கே ஒரு சகோதரன் மத்தேயு 9:36-38இல் உள்ள வேதவசனப்பகுதியை குறித்து பிரசங்கித்தார். அப்போது நான் அதை நன்றாக கேட்க கடவுள் உதவி செய்-தார். உண்மையாக இயேசு கிறிஸ்து-வின் அன்பும் அந்த மேய்ப்பனில்லாத ஆடுகள் மீது அவருக்கு இருந்த கரிசனையும் அவர் சிலுவையில் பட்ட பாடுகளும் என் உள்ளத்தில் பெரிய ஆச்சரியமாகவும் வேதனையாகவும் இருந்தது. அந்த இயேசு கிறிஸ்துவே உண்மையான கடவுள் என்பதையும் அவராலே தான் இரட்சிப்பு உள்ளது என்பதையும் அறிந்து கொண்டு அன்றைய நாளில் தான் என்னுடைய பாவங்களை அவரிடம் கூறி மனஸ்தா-பப்பட்டு மன்றாடினேன்.

பின்பு என்னுடைய உள்ளத்தில் ஒரு பெரிய நிம்மதி, சந்தோஷம் ஒன்று உண்டானது. பின்பு எனது வாழ்வு மாற ஆரம்பித்தது. இந்து சமய வழி-பாடுகள், பொட்டு வைத்தல், சிலை வணக்கம், விளக்கு ஏற்றல் போன்ற காரியங்களை நான் வெறுத்தேன். சபை கூட்டங்கள், ஜெப கூட்டங்கள், வீட்டு கூட்டங்கள் என்பவற்றில் மிக ஆர்வமாக கலந்து கொண்டேன். அது மாத்திரமல்ல, எனது குடும்பம் இரட்சிக்-கப்பட வேண்டும் என ஜெபம் செய்-தேன். தேவன் எனது குடும்ப அங்கத்-தவர்களும் இரட்சிப்படைய உதவி செய்தார். எல்லா சிலைகளும் படங்க-ளும் அகற்றப்பட்டன. உண்மையாக நான் இரட்சிப்படைந்த நாளிலிருந்து இந்நாள் வரைக்கும் கர்த்தர் தாமே என்னை வழிநடத்தி, ஆளுகை செய்து, ஆசீர்வதித்து வருகிறார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

- Devi Lavankumar -

# சர்வ வல்லவரின் பார்வையில் சாராளின் நகைப்பு

## ஆதியாகமம் 18:12

பலவிதமான சந்தர்ப்பங்களில் நம்மில் அநேகர் சிரித்துக்கொண்டே அழுகிறோம்; அழுது கொண்டே சிரிக்கிறோம். நாம் சிரிக்கிறோமா அல்லது அழுகிறோமா என்று யாருக்குமே தெரியாது.

பல நூறு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் ஒரு அழகான பெண் தனது கூடார வாசலில் நின்று கொண்டு சிரித்தாள். அது சந்தோஷமான சிரிப்பு அல்ல. அந்த சிரிப்புக்கு பின்னால் எத்தனையோ ஏமாற்றங்கள், வேதனைகள், தோல்விகள், பாதுகாப்பின்மை என்று அடுக்கிக்கொண்டே போகலாம். இந்த நிலைமை ஒரு வருடமோ இரண்டு வருடங்களோ அல்ல, கிட்டத்தட்ட இருபத்து நான்கு வருடங்கள். இதில் ஆச்சரியம் என்னவென்றால், அவள் சிரித்தது வேறு யார் முன்னிலையிலுமல்ல, சர்வ வல்லமையுள்ள தேவன் முன்னிலையில். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. ஏனெனில் அவர் நம்மை சிருஷ்டித்தவர். தாயின் கர்ப்பத்தில் உருவாவதற்கு முன்பதாகவே எம்மை அறிந்திருக்கிறார். சங்கீதம் 139:1-16

இந்தப்பெண் வேறு யாருமல்ல. விசுவாசத்தின் தந்தையும் தேவனின் சிநேகிதனுமாகிய ஆபிரகாமின் மனைவி சாராள். இவள் அழகான ஒரு பெண் (ஆதியாகமம் 12:11)

தேவன் ஆபிரகாமுக்கு தேசம், இனம், தகப்பனுடைய வீடு இவையெல்லாவற்றையும் விட்டுவிட்டு தான் காண்பிக்கும் தேசத்துக்கு போகும்படி கூறினார். சாராள் எந்த ஒரு மறுப்பும் கூறாமல் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தாள்.

சாராளின் அழகு ஆபிரகாமுக்கு ஆபத்தாயிருந்தபடியால் ஆபிரகாம் தன்னை பாதுகாத்துக்கொள்வதற்காக அவர்கள் இருவரும் போகும் இடமெல்லாம் சாராள் தன்னுடைய சகோதரி அதாவது சாராள் தனது மனைவி இல்லை என்று கூறும்படி சாராளிடம் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். ஏனெனில் அந்நாட்களில் வாழ்ந்த ஜனங்களுக்கு கடவுள் பயம் இருக்கவுமில்லை சட்டத்திட்டங்களோ நீதிமன்றங்களோ இருக்கவுமில்லை. சாராளினிமித்தம் ஆபிரகாமை கொன்று விடுவார்கள் என்று ஆபிரகாம் பயந்தார். ஆதியாகமம் 20:11

சாராள் ஆபிரகாமின் சகோதரி என்பது ஒரு விதத்தில் உண்மை. எப்படியெனில், சாராளின் தகப்பனும் ஆபிரகாமின் தகப்பனும் ஒருவர்; தாய் வேறு. ஆதியாகமம் 20:12

ஒரு தடவை அவர்கள் எகிப்திற்கு வந்த போது, எகிப்தின் ராஜா பார்வோன் சாராளின் அழகினிமித்தம் அவளை தன்னுடைய மனைவியாக்கி கொள்வதற்காக அவளுடைய கணவன் ஆபிரகாமின் முன்னிலையிலேயே

அரண்மனைக்கு சாராளை அழைத்து சென்றான். தன்னுடைய கணவன் முன்னிலையிலேயே சாராளை அழைத்து செல்லும் போது சாராளின் மனநிலை எப்படியிருந்திருக்கும்! தன்னுடைய கணவனால் கூட தன்னை காப்பாற்ற முடியாத நிலைமை. இந்த ஒரு தடவை மட்டுமல்ல, இன்னொரு தடவை கேராரின் ராஜா அபிமெலேக் சாராளை தன் மனைவியாக்கிக் கொள்வதற்காக அவள் கணவன் முன்னிலையிலேயே அவளை தன்னுடைய அரண்மனைக்கு அழைப்பித்தான். தன்னை பாதுகாக்க வேண்டிய கணவனே தன்னை பாதுகாக்க முடியாத நிலைமையில் சாராள் எவ்வளவாக தவித்துப்போயிருப்பாள்! எனினும், சர்வ வல்லமையுள்ள தேவன் சாராளை கைவிடவில்லை. தேவன் சாராளை காப்பாற்றினார். ஆதியாகமம் 12:17-20; 20:17

ஆதியாகமம் 16ம் அதிகாரத்தில் சாராள் தன்னுடைய சுய புத்தியினாலே தேவனுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற முற்படுவதை பார்க்கிறோம். அதின் விளைவு சாராளுடைய வீட்டு வேலைக்காரியினாலேயே அற்பமாக எண்ணப்படுகிறாள். இதினால் சாராளின் மனநிலை எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கும்! எவ்வளவு பெரிய வேதனை! ஆனால் தனது பிழையை ஆபிரகாம் மீது சுமத்துகிறாள். ஆதியாகமம் 16:5.

ஆபிரகாம் மூலம் கர்ப்பவதியான வேலைக்கார பெண்ணாகிய ஆகாரை நேரடியாக விரட்ட முடியாமல் அவளை கடினமாக நடத்தி தன்னை விட்டு ஓடிப்போகச்செய்கிறாள். இது சாராளுடைய பிழையாக இருந்தப்போதிலும் தேவன் சாராளுக்கு இரக்கம் காண்பிக்கிறார். ஆகார் மறுபடியும் சாராளிடத்தில் திரும்பி வந்து சாராளின் கையின் கீழ் அடங்கியிருக்கும்படி செய்கிறார். ஆதியாகமம் 17:9

இப்போது சாராள் நம்பிக்கை அற்றுப்போனவளாய் விரக்தியடைந்தவளாய் தனக்கு இனி குழந்தையே பிறக்காது என்ற முடிவுக்கு வருகிறாள்.

ஆதியாகமம் 18:10, தேவன் ஆபிரகாமுக்கு மறுபடியும் தரிசனமாகி சாராள் ஒரு குமாரனை பெறுவாள் என்று கூறுவது மாத்திரமல்லாமல் அதின் காலத்தையும் கூறுகிறார். இதை கூடாரவாசலில் நின்றுகொண்டு ஒற்று கேட்ட சாராள் தேவன் தன்னைக் காணவில்லை என நினைத்து மனதிற்குள் சிரிக்கிறாள். சர்வ வல்லமையுள்ள தேவன் அதைக்கண்டார். அவளுடைய வேதனையான சிரிப்பை சந்தோஷமான சிரிப்பாக மாற்றினார். ஆதியாகமம் 21:6

தேவன் எமக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்கள் கூட இன்னும் நிறைவேறாமல் இருக்கலாம்; காலங்கள் கடந்து போயிருக்கலாம்; சூழ்நிலைகள் பாதகமாக இருக்கலாம்; இதில் சோர்வடைந்து நம்பிக்கையற்று போயிருக்கலாம்.

நம்முடைய தேவன் நெரிந்த நாணலை முறியாமலும் மங்கியெரிகிற திரியை அணையாமலும் இருக்கப்பண்ணுகிறார், ஏசாயா 42:3. எமக்காக அவர் தன்னுடைய ஜீவனையே கொடுத்தவர். நித்திய ஜீவனையே கொடுத்த தேவனுக்கு தற்காலிக தேவைகளை சந்திப்பது ஒரு பெரிய விஷயமே அல்ல. ஆமென்

- Grace Fernando -

# அன்பு

**கர்த்தரைத் துதியுங்கள் அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.
தேவாதி தேவனைத் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது.
கர்த்தாதி கர்த்தரைத் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது.
ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள்.
அவர் கிருபை என்றுமுள்ளது.
வானங்களை ஞானமாய் உண்டாக்கினவரைத் துதியுங்கள்.
அவர் கிருபை என்றுமுள்ளது.
தண்ணீர்களுக்கு மேலே பூமியைப் பரப்பினவரைத் துதியுங்கள்.
அவர் கிருபை என்றுமுள்ளது.
சங்கீதம் 136:1-6**

நாம் ஆராதிக்கும் தேவன் அன்பின் தேவன். "அவர் கிருபை என்றுமுள்ளது" என்ற சொற்றொடர் இவ்வதிகாரம் முழுவதும் வருகின்றது. தேவனுடைய அன்பு மற்றும் அவரது கிருபை என்றுமுள்ளது என்பதைப்பற்றி கூறும் அநேக வசனங்கள் வேதத்திலுள்ளன. தேவனுடைய கோபத்தைப்பற்றி இதே போல் வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. தேவன் சம்பூரணமானவர் என்று யாராவது நினைக்கலாம். அது உண்மை. ஆனால், அந்த காரணத்தினால் தேவனுடைய பண்புகள் சமச்சீரானது, ஒரு பக்கத்தில் தேவனுடைய அன்புள்ளது. அழகாக சமப்படுத்தப்பட்ட மறுபக்கத்தில் தேவனுடைய கோபமுள்ளது என நீங்கள் நினைக்கலாம். தேவனுடைய அன்பையும் கோபத்தையும் சமமாகவோ அல்லது எதிரான பண்பாகவோ வேதாகமம் சித்தரிப்பதில்லை.

சங்கீதம் 103:8,9ஐ வாசிக்கவும். "கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார் என்றைக்கும் கோபங்கொண்டிரார்". நீங்கள் அவதானித்தீர்களா? தேவனுடைய கிருபை என்றுமுள்ளது ஆனால் என்றைக்கும் கோபங்கொண்டிரார்.

1 யோவான் 4:8ல், "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று கூறப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் தேவன் இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சமாக அன்பு செலுத்துபவரல்ல. அவர் மக்களை நேசிக்கிறார். அதை விடவும் தேவனுடைய சுபாவமே அன்பாகத்தான் இருக்கிறது.

ஆனால் தேவனுடைய கோபம் தூண்டப்பட்டது. உபாகமம் 9:7ஐ வாசிக்கவும் "நீ வனாந்தரத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்கு கடுங்கோபம் உண்டாக்கினதை நினை, அதை மறவாயாக." தேவனுடைய கோபம் தூண்டப்படக்கூடியது. அது பற்றவைக்கக்கூடியது. அது எழுப்பப்படக்கூடியது என சாமுவேல் கூறினான். தேவனின் கோபத்தை எழுப்பலாம். பாவத்தினால் தேவனுடைய கோபம் தூண்டப்படும்.

தேவனின் கோபத்தை தூண்டக்கூடிய, பாவம் இல்லாத ஒரு காலம் இருந்தது. உலக சிருஷ்டிப்புக்கு முன் தேவன் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியாக பூர்ண இணக்கத்துடனும் அன்புடனும் வாழ்ந்தார். திரித்துவத்தின் நபர்களுக்கிடையில் எவ்வித கசப்போ போட்டியோ கோபமோ இருக்கவில்லை.

நாம் தேவனை ஆராதிக்கையில் இது எவ்வாறு எம்மை பாதிக்கும்? நாம் தேவனுடைய பிள்ளைகள். நாம் அன்பின் சமூகத்தாரும் ஒருவகையில் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் சமூகத்தையும் அவர்கள் பகிர்ந்த அன்பையும் பிரதிபலிப்பவர்களுமாய் இருக்கிறோம். நாம் ஆராதிக்க வருகையில் நாம் தேவனோடு மாத்திரமல்ல நம்முடைய உடன் சகோதர சகோதரிகளுடனும் ஒப்புரவாயிருக்க வேண்டும். எல்லோரையும் எல்லா இடத்திலும் அன்புகூறும் அன்பின் மக்களாய் நாம் இருக்க வேண்டும்.

மத்தேயு 5:23,24 - “ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென அங்கே நினைவுகூருவாயாகில், அங்கே தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.”

பலிபீடத்தினிடத்தில் காணிக்கையை செலுத்த வந்த ஒரு மனிதன் இங்குள்ளான். அவன் தேவனை ஆராதிக்க வந்தான். ஆனால், முதலில் அவன் செய்ய வேண்டிய ஒரு வேலை இருந்தது. “பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகு.”

நாம் இவ்வாறிருக்க வேண்டும். முற்றிலும் ஒப்புரவாக்கப்பட்டு தேவனை ஆராதிக்க ஒன்றுகூடும் எல்லோரையும் எல்லா இடத்திலும் அன்புகூறும் மற்றும் ஒன்றாய் அன்பின் தேவனை ஆராதிக்கும் அன்பின் சமூகத்தாராய் இருப்போம்.

- Kumar Abraham -

## தேவனுடைய செயல்கள்

பெரியவை
சங்கீதம் 111:2

ஆராயப்படுகிறவை
சங்கீதம் 111:2

மகிமையும் மகத்துவமுமானவை
சங்கீதம் 111:3

அதிசயமானவை
சங்கீதம் 111:4

பலத்தவை
சங்கீதம் 111:6

சத்தியமானவை
சங்கீதம் 111:7

நியாயமானவை
சங்கீதம் 111:7

# நம் நடுவிலிருக்கும் கர்த்தர்
# நீதியுள்ள நியாயாதிபதி
## செப்பனியா 3:5

அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் நடுவிலிருக்கும் கர்த்தர் 3 முக்கிய குணாதிசயங்களை வெளிப்படுத்துகிறார் என செப்பனியா 3:5,15,17ல் நாம் காண்கிறோம்.

வசனம் 5 - மக்கள் நடுவிலிருக்கும் **நீதியுள்ள நியாயாதிபதியான** கர்த்தர்
வசனம் 15 - மக்கள் நடுவிலிருக்கும் **வெற்றியுள்ள ராஜாவான** கர்த்தர்
வசனம் 17 - மக்கள் நடுவிலிருக்கும் **வல்லமைமிக்க போர்வீரரான** கர்த்தர்

இக்கட்டுரையில் 5ம் வசனத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்களை கருத்தில் கொள்வோம் - மக்கள் நடுவிலிருக்கும் **நீதியுள்ள நியாயாதிபதியான** கர்த்தர். இதை புரிந்து கொள்ளவதற்கு நாம் செப்பனியா 3:1-13ஐ வாசிப்போம். இப்பகுதியை வாசிக்கையில் நீதியுள்ள நியாயாதிபதியைக்குறித்து பின்வரும் 3 அம்சங்களை காணலாம்.

- நீதியுள்ள நியாயாதிபதியை **அடையாளம் காணல்**
- நீதியுள்ள நியாயாதிபதியின் **கீர்த்தி**
- நீதியுள்ள நியாயாதிபதியின் **பொருத்தப்பாடு**

### 1) நீதியுள்ள நியாயாதிபதியை அடையாளம் காணல்
### செப்பனியா 3:2/ 3:3,4/ 3:7

இவ்வசனங்களை வாசிக்கையில் மக்கள் நடுவில் நீதியுள்ள நியாயாதிபதி ஈடுபடும் காரியங்கள் எமக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. முதலாவதாக இந்த நீதியுள்ள நியாயாதிபதி நடக்கும் அனைத்தையும் **பார்க்கிறார்** என்பதை நாம் அறிந்துகொள்கின்றோம். எருசலேமில் வாழ்ந்த மக்கள் தங்களது அனைத்து அவபக்தியான கிரியைகளையும் தேவன் பார்க்கிறார் என்பதை இலகுவில் மறந்துவிட்டார்கள். தம் மக்களுடைய விவகாரங்களில் விருப்பமில்லாதது போல கர்த்தர் குறிப்பிட்ட காலப்பகுதியில் மௌனமாய் இருந்தாலும், இவ்வசனத்தில் நியாயாதிபதியான கர்த்தர் மக்களின் நடத்தையை தாம் அவதானித்ததை தெளிவாக குறிப்பிடுகின்றார். செப்பனியா 3:2ல் தம் மக்களிடம் தாம் அவதானித்த 4 காரியங்களை குறிப்பிடுகின்றார்.

- அவள் சத்தத்திற்கு கீழ்படியவில்லை
- அவள் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை
- அவள் கர்த்தரை விசுவாசிக்கவில்லை
- அவள் தன் தேவனிடம் கிட்டிசேரவில்லை

அவ்விடத்தில் எமது பெயரை சேர்த்து இவ்வசனத்தை வாசித்தால் அது நான் உங்களுக்கு விளங்கப்படுத்த முற்படுவதைவிட அதிகமாக பேசும். கவலைக்கிடமாக இன்று எம்மில் பலரைக்குறித்தும் தேவன் சொல்லக்கூடியது இதுவாயிருக்கலாம். தேவன் எமது ஒவ்வொரு சிந்தை, வார்த்தை மற்றும் செயலை பார்க்கிறார்; கவனிக்கிறார். அவர் மௌனமாயிருப்பது போலவும் கவனிக்காதது போலவும் இருந்தாலும், இவ்வசனத்தின்படி எருசலேம் மக்கள் செய்த எல்லாவற்றையும் கர்த்தருடைய கண்காணிக்கும் கண்கள் கவனமாக பார்த்தன என்பதை நாம் பார்க்கிறோம்.

இரண்டாவதாக, அவர் அனைத்து நடவடிக்கையையும் **நிறுத்து** நிலைமையின் உண்மையான துல்லியமான மதிப்பீட்டை தருகிறார் என நாம் அறிகிறோம். மக்களுடைய தலைமைத்துவம் நீதியாக செயல்படும் என எதிர்பார்த்த போது அவர்கள் நல்ல தலைமைத்துவத்தின் பொறுப்புக்களை அலட்சியம் செய்து தங்கள் அதிகாரத்தையும் சலுகைகளையும் துஷ்பிரயோகம் செய்தார்கள். 4 நிலைகளிலான தலைமைத்துவங்களை குறிப்பிடுகின்றார் - பிரபுக்கள், நியாயாதிபதிகள், தீர்க்கதரிசிகள் மற்றும் ஆசாரியர்கள். தலைமைத்துவத்தின் அரசாங்க விவகாரங்களைக்குறித்து கர்த்தர் விவரமான விளக்கத்தை தருகிறார். நம்முடைய நடத்தையின் பின்னாலிருக்கும் நோக்கங்களையும் காரணங்களையும் யாரும் கர்த்தரிடம் சொல்லத்தேவையில்லை. கர்த்தருக்குத்தெரியும். அவர் அதை சரியாக கணிக்கிறார். எங்கள் நிலையைக்குறித்த அவருடைய மதிப்பீட்டை எங்களால் மறுக்க முடியாது. கர்த்தர் நீதியுள்ளவர். ஆகவே அவர் தலைவர்கள் அல்லது சாதாரண மனிதன் என பாரபட்சம் காட்டமாட்டார். எமது ஆவிக்குரிய நிலை எப்படியிருந்தாலும் எமது ஒவ்வொரு நோக்கம் மற்றும் நடத்தையை அவர் நிறுக்கிறாரென்பதை கர்த்தர் எம்மெல்லோருக்கும் நினைவூட்டுகிறார். நாம் சாதாரண விசுவாசிகளாகவோ அல்லது ஏதேனும் ஊழியம் செய்பவர்களாகவோ இருக்கலாம். அது எதுவாயினும் கர்த்தர் எமது ஒவ்வொரு கிரியையையும் நிறுக்கிறார்.

மூன்றாவதாக, மக்கள் தங்கள் கலக குணத்திலிருந்து மனந்திரும்பி பாடத்தைக்கற்றுக்கொள்ள அவர்கள் முகம்கொடுத்திருக்கும் சூழ்நிலையின் மூலம் அவர் **எச்சரிக்கின்றார்.** ஆனால், கவலைக்கிடமாக அவர்கள் யாரும் அதை இருதயத்தில் ஏற்றுக்கொள்ளவோ கர்த்தரால் கொடுக்கப்பட்ட எச்சரிக்கைகளை கவனத்தில் கொள்ளவோ இல்லை. அதற்கு பதில் கர்த்தரால் கொடுக்கப்பட்ட எச்சரிக்கை அடையாளங்களை புறக்கணித்து தங்கள் வழியிலேயே தொடர்ந்தார்கள். கர்த்தர் எங்கள் வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலைகளையும் எங்களை சூழ்ந்துள்ள நிலைமைகளையும் எம்மை எச்சரிக்க பயன்படுத்துகின்றார். அன்பானவர்களே, எங்கள் வழியில் தேவன் கொண்டுவரும் எச்சரிக்கை அடையாளங்களுக்கு நாம் உணர்வுள்ளவர்களாயிருப்போம்.

அவர் எங்கள் நடுவிலிருக்கும் நீதியுள்ள நியாயாதிபதி என்றும் அவர் எம்மை பார்த்து, நிறுத்து, எச்சரிக்கிறார் என்றும் தனிப்பட்ட விதத்திலும் குடும்பமாகவும் சபையாகவும் எம்முடன் கர்த்தர் பேசுகிறார். நீங்களும் நானும் இதற்கு

உணர்வுள்ளவர்களாய் இதை தீவிரமாய் எடுத்து இவ்வசனங்களின் வெளிச்சத்தில் எம் வாழ்வை பரீசிலித்து பார்க்க வேண்டும்.

### 2) நீதியுள்ள நியாயாதிபதியின் கீர்த்தி - செப்பனியா 3:5

நீதியுள்ள நியாயாதிபதியின் கீர்த்தியை அறிந்துகொள்ளவும் பாராட்டவும் மக்களுடைய தலைவர்களின் வருந்தத்தக்க நிலையை நாம் உணரவேண்டும். 3ம் வசனத்தில் இதற்கு ஒப்பான ஒன்றுள்ளது. அதாவது, இந்த தலைவர்களும் மக்கள் நடுவிலிருந்தனர் ஆனால் அவர்களுடைய வழிகளும் வழிமுறைகளும் அவர்கள் நடுவிலிருக்கும் நீதியுள்ள நியாயாதிபதியான கர்த்தரை விட மிகவும் வேறுபட்டிருந்தது. தலைமைத்துவத்தையும் வழிநடத்தலையும் கொடுக்கவேண்டிய மக்களே அநீதியினாலும் பாவத்தினாலும் நிறைந்து அலட்சியமாக நடந்தார்கள். ஆனால், இதற்கு முற்றிலும் வேறுபட்ட விதமாக தம் மக்கள் நடுவிலிருக்கும் நீதியுள்ள நியாயாதிபதியான கர்த்தர் நிகரற்ற கீர்த்தியை கொண்டுள்ளார் என்பதை நாம் காண்கிறோம்.

அவர் **நியாயமானவர்** - எந்த பாவமோ அநீதியோ செய்ததில்லை, அவருடைய நியாயத்தீர்ப்புக்கள் உண்மையானவை. அவருடைய நியாயத்தீர்ப்புக்கள் **நவமானவை** - காலைதோறும் அவர் அவருடைய நியாயத்தீர்ப்புக்களை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தார் (கர்த்தர் அவருடைய நியாயத்தீர்ப்புக்களை அளிப்பதில் தாமதமாகுவது போல் தெரிந்தாலும், அவருடைய நியாயத்தீர்ப்புக்கள் நேரத்துகந்தவை). அவர் **உண்மையுள்ளவர்** - நல்லதை பாராட்டுவதிலும் தவறை கண்டிப்பதிலும் இருக்கின்ற அவருடைய பொறுப்பிலிருந்து அவர் என்றும் தவறினதில்லை.

இன்று எங்கள் நடுவிலிருக்கும் நீதியுள்ள நியாயாதிபதியான கர்த்தர் இன்றும் கூட மாறாதாவர். நிலைமைகள் சரியாயில்லாத போது கர்த்தர் என்ன செய்கிறாரென மக்கள் கேள்வி கேட்க கூடும். அவர் புலப்படும் வகையிலும் மக்கள் எதிர்பார்ப்பது போல் தீவிரமாகவும் ஏன் செயல்படுவதில்லை? ஆனால், நீதியுள்ள நியாயாதிபதியாக எங்கள் நடுவிலிருக்கும் அவர் சரியான நேரத்தில் சரியான விதத்தில் செயல்படுவாரென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். எங்களை கண்டிக்கவோ அல்லது பரிசளிக்கவோ எங்கள் நடுவிலிருக்கும் நீதியுள்ள நியாயாதிபதி நியாயமானவர் என்றும் அவருடைய நியாயத்தீர்ப்புக்கள் நவமானவை என்றும் அவர் நீதியை உண்மையாக அளிப்பார் என்றும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஆகவே நாம் இவ்வுலகத்திலுள்ள எவரையும் பார்க்காமல் இந்த நியாயாதிபதியை நோக்கிப்பார்ப்போம்.

### 3) நீதியுள்ள நியாயாதிபதியின் பொருத்தப்பாடு

நாம் ஏற்கனவே நீதியுள்ள நியாயாதிபதியின் குணாதிசயங்களையும் செயல்பாடுகளையும் அடையாளம் கண்டுள்ளதால் எங்கள் நடுவிலிருக்கும் நீதியுள்ள நியாயாதிபதியாக அவருடைய நியாயத்தீர்ப்பு உங்களுக்கும் எனக்கும்

எவ்வாறு பொருந்தும் என்பதை கருத்தில் கொள்வோம்.

### அ) தண்டனையும் மன்னிப்பும் - செப்பனியா 3:1-13

முதலாவதாக எங்கள் நடுவிலிருக்கும் நீதியுள்ள நியாயாதிபதி சரியான நேரத்தில் ஏற்றபடி எம்மை **தண்டிப்பார் மற்றும் மன்னிப்பார்.** எருசலேமை சுற்றியுள்ள நாடுகளை கர்த்தர் நியாயம் தீர்க்கும் அதேவேளை, எருசலேமில் வாழ்ந்தவர்கள் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்கள் என்பதால் அவர்கள் மற்றவர்களைவிட நல்லவர்கள் என்றும் அவர்களுடைய துன்மார்க்கத்திற்கு தேவன் கண் சிமிட்டுவாரென்றும் நினைத்தார்கள். ஆனால், தேவன் அவர்களையும் விடவில்லை என்பதை நாம் காண்கிறோம். அவருடைய நீதியிலே அவர்களை தண்டித்து நியாயந்தீர்த்தது போல அவர்களை மன்னிக்கவுஞ்செய்தார். அன்புள்ள சகோதர சகோதரிகளே, இன்றும் கர்த்தர் அவருடைய நீதியிலே எம்மை தண்டித்து மன்னிக்கிறார் - 1 பேதுரு 4:17/ 1 கொரிந்தியர் 11:31. அவர் எம் நடுவிலிருக்கிறாரென்றும் நாம் யாராயிருந்தாலும் அவர் எம்மை தண்டிப்பார் மற்றும் நாம் மனந்திரும்பி அவரண்டை சேர்கையில் கருணையுடன் மன்னிப்பாரென்றும் கர்த்தர் எமக்கு நினைவூட்டுகிறார். இவ்வுண்மையை உணர்ந்து கர்த்தருக்கு பயந்து நம் வாழ்க்கையை நடத்துவோம். எம்மைக்குறித்து எல்லாம் நன்றாயிருக்கின்றது என்ற மனநிறைவுடன் வாழாமல் எம் நடுவிலுள்ள நீதியுள்ள நியாயாதிபதி எம்மை தண்டித்து மன்னிக்கிறவர் என்பதை ஞாபகத்தில் கொள்வோம்.

### ஆ) மன்றாட்டும் பாதுகாப்பும் - 1 பேதுரு 2:21-23

இரண்டாவதாக நாம் முகங்கொடுக்கும் அனைத்து எதிர்ப்புகளுக்கும் எங்கள் நடுவிலிருக்கும் நீதியுள்ள நியாயாதிபதி **மன்றாடி பாதுகாப்பார்.** மக்கள் எம்மை தவறாக புரிந்து கொள்வார்கள், தவறாக பயன்படுத்துவார்கள், எதிர்ப்பார்கள் மற்றும் எமக்கும் எமக்கெதிராகவும் பலவற்றை பேசி, நினைத்து மற்றும் செயல்படுவார்கள். வெளி உலகத்திலுள்ள மக்களும் எம் சொந்த குடும்பத்தாரும் ஆவிக்குரிய குடும்பமும் எமக்கெதிராய் செயல்படுவார்கள். நாம் சரியென்பதை நிரூபிக்க நம்மை நாமே நியாயப்படுத்த தேவையில்லை என்பதை நினைவில் கொள்வோம். தம்மை நீதியுள்ள நியாயாதிபதிக்கு ஒப்புக்கொடுத்து ஒவ்வொரு எதிர்ப்பையும் அமைதியாக சகித்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து பாடத்தைக்கற்றுக்கொள்வோம். அன்புள்ள சகோதர சகோதரிகளே, இன்று நீதியான வாழ்க்கையை வாழ்ந்து தேவனுக்கு முன் சரியானதைச்செய்து வீழ்த்தப்பட்டதாக உணர்ந்து புறக்கணிக்கப்பட்டு தவறாக பயன்படுத்தப்பட்டு உங்களைச்சுற்றியுள்ளவர்களால் எதிர்ப்புக்கு முகம்கொடுப்பீர்களானால், கர்த்தர் உங்களோடு பேசுகிறார். நீங்கள் முகம்கொடுத்த அநீதியைக்குறித்து புகார் சொல்லி சுற்றித்திரியாமல் நீதியாக நியாயம்தீர்க்கும் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்து அமைதியாயிருங்கள். எங்கள் நடுவிலிருக்கும் நீதியுள்ள நியாயாதிபதி எங்களுக்காக மன்றாடி எம்மை பாதுகாப்பார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏற்ற காலத்தில் உங்களை நியாயப்படுத்தவும் பாதுகாக்கவும் கர்த்தருக்கு இடமளியுங்கள். அப்பொழுது உங்கள் வாழ்விலுள்ள நித்திய

நோக்கத்தையும் திட்டத்தையும் அவரால் நிறைவேற்ற முடியும்.

**இ) நிரூபித்தலும் உயர்த்துதலும் - சங்கீதம் 26:1,2/ வெளிப்படுத்தல் 22:12**

மூன்றாவதாக எங்கள் நடுவிலிருக்கும் நீதியுள்ள நியாயாதிபதி எம்மை **நிரூபித்து உயர்த்துவார்** என்பதை காண்கிறோம். எம் ஒவ்வொரு நினைவையும் வார்த்தையையும் செயலையும் ஆராய்ந்து பரிசளிக்கும் அவர் நீதியுள்ளவர். எம்மைச்சுற்றியுள்ளவர்களால் எம் வேலையும் ஊழியமும் அங்கீகரிக்கப்பட்டதா, பாராட்டப்பட்டதா, பரிசளிக்கப்பட்டதா என நாம் கவலைகொள்ள தேவையில்லை. நாம் எதிர்பார்க்கும் பாராட்டு இவ்வுலகில் எமக்கு கிடைக்காமலிருக்கலாம். எங்கள் நடுவிலிருக்கும் எம் நீதியுள்ள நியாயாதிபதியான கர்த்தர்தான் எல்லாவற்றையும் பரீட்சித்து நிரூபித்து எம்மை ஏற்ற வேளையில் பரிசளித்து உயர்த்துவார் என்பதை நினைவில் கொள்வோம். நீதியுள்ள நியாயாதிபதியாக எங்கள் நடுவிலிருக்கும் கர்த்தர் உங்கள் கிரியைக்கும் நேர்மைக்கும் ஏற்றபடி பலன்கொடுப்பார் என்பதை இன்று விசுவாசியுங்கள். அவர் உங்களை பரீட்சித்து பலன் கொடுக்க அவருக்கு முன்பாக உங்கள் வாழ்க்கை சரியாயுள்ளது என்ற நிச்சயம் உங்களுக்குள்ளதா? உங்களை நிரூபித்து அதிக உயரங்களுக்கு உயர்த்த கர்த்தருக்கு இடமளியுங்கள்.

- Dinesh Malcolm Paul -

தபால் அல்லது மின்னஞ்சல் மூலமாக “ஜீவ ஒளி” சஞ்சிகையை
பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் தயவுசெய்து கீழுள்ள
தொலைபேசி இலக்கங்களுக்கூடாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ
எம்மை தொடர்பு கொள்ளுங்கள்
அல்லது
எமது வலைப்பக்கத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

## CHRISTIAN FELLOWSHIP CENTRE




(+94) 112581901
(+94) 773595533
cfellowship@sltnet.lk
www.christianfellowshipcentre.com